www.osilmo.com

# OSILMO Special Education & Research Center for Autistic Children







# மனிதாபிமானம் மற்றும் கருனை உள்ளம் படைத்தவர்களுக்கான ஓர் அழைப்பிதள்

**ஆயிரக்கணக்கான பெற்றோரின் இதயங்களில்**

**உள்ள நெருப்பை அனைப்பதற்கும்....**

**அவர்களின் உள்ளங்களிற்கு ஆறுதல் தருவதற்கும்....**

**ஒவ்வொரு வினாடியும் உலகத்திற்கு தெரியாது மனதிற்குள்**

**அழுது கொண்டு இருப்பவர்களிற்கு விமோட்சம் கொடுப்பதற்கும்....**

**உறுதி அளிப்பதற்கும் மற்றும் நல்ல வளிகாட்டுவதற்குமாக**

**இருப்பவர்கள் தான் ஒசில்மோ ஆகிய நாங்கள்....**

மனித பிறவி எடுப்பது என்பது மிகவும் அரிதான காரியம் என்று எல்லா மதங்களிலும் கூறப்பட்டுள்ளது மட்டும் அன்றி நாம் ஒவ்வொருவரும் அறிந்த உன்மையுமாகும். அப்படியாயின் இந்த அரிய மனித பிறவியில் உலகிற்கு எம்மால் இயன்ற உதவியை செய்வோமாயின் எமது பெயர் என்றும் அழியாது நிலைபெறும் என்பதில் ஐயமில்லை.



கருனை உள்ளம் படைத்த அன்பார்ந்த உள்ளங்களே சில வினாடிகள் உங்கள் கண்களை திறந்து பாருங்கள் காலம் கணிந்துள்ளது எம்மை பற்றி அறிந்துகொள்வதற்கு. உதவியை எதிர்பார்து நிற்கும் இவர்களிற்கு உங்கள் உதவி கரங்கள் உதவட்டும். இவர்கள் யார்? உங்கள் உதவியை ஏன் எதிர்பாாகிரார்கள்? பசுமை நிறைந்த சின்னஞ்சிறார்களின் கண்ணீர் கலந்த உண்மை கதை இது.

எமது உலகத்தில் பிறந்து வேறு உலகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் மிகவும் அழகான மாறுபட்ட பளக்கவளக்கங்கள் உடைய இந்த ஓட்டிசம் (Autism) குழந்தைகள் பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

ஒரு குழந்தை கருவுற்ற காலத்தில் இருந்து அந்த பிள்ளையின் முகத்தை பார்கும் வரை பெற்றோர்களின் மனதளவினாளான ஏக்கம் வார்த்தைகளினால் வர்னிக்க முடியாது. அழகான பிஞ்சு முகத்தை கண்ட பெற்றோர் நாள் ஒரு வண்ணம் பொழுதொரு மேனியுமாக அந்த குழந்தையை எத்தனை விதமான கற்பனைகளுடன் பாதுகாத்து வளர்க்கின்றனர்.

**"அது பெரிது இது பெரிது என்பர் மழலை சொல் கேளார்"** என்பதற்கு இனங்க எனது பிள்ளை எப்பொழுது தவழ்வான் எப்பொழுது நடப்பான் எப்பொழுது கதைப்பான் எப்பொழுது பாடசாலை செல்வான் என்று மிக மிக பெரிய கனவு கோட்டையை கட்டி விடுவார்கள் அன்பான பெற்றோர். ஆனால் இந்த கற்பனை கோட்டைகள் எல்லாம் சூரிய ஒளியை கண்ட நீர்துளி மறைவது போல் யாரும் நினைக்காதவாறு மறைந்துவிட்டால்... அந்த பெற்றோர் படும் வேதனையை எவ்வாறு சொல்வது.

உருவத்தில் அழகான சாதாரணமாக தோற்றமளிக்கும் இந்த பிள்ளைகள் முகத்தை முகம் பார்க்காது, மற்ற பிள்ளைகளுடன் சேராது தனிமையில் இருந்து சிறிது சிறிதாக வந்த மழலை சொற்கள் இல்லாது போய் வாய் பேசாது போகும் போது அந்த குழந்தைகளின் பெற்றோர் படும் வேதை-னயும் குழப்பமும் எம்முள் எத்தனை பேருக்கு தெரியும்.

"ஓட்டிசம் எனும் அரக்கன் பிஞ்சு குழந்தைகளின் அழகான உலகத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு செல்லும் அளவு கூடிக்கொண்டே செல்கிறது. இவ்வாறு தமது பிள்ளை ஓட்டிசம் குறைபாடினால் பாதிகப்பட்டதை அறிந்தவுடன் உலகத்தையே மறந்து அழுது புலம்பும் அந்த பெற்றோருக்கு ஒசில்மோ ஆகிய நாங்கள் இதய சுத்தியுடன் பொறுமையாகவும் அன்புடனும் விடாமுயற்சியுடனும் மனிதனேயத்துடனும் அவர்களிற்கு இதய புர்வமாக உதவுகின்றோம்.

ஓட்டிசம் யாதி, மதம், இனம் என்று எதுவும் பார்பதில்லை அதுபோல் ஏழை, பணக்காரன், படித்தவர், படிக்காதவர் என்று எதுவும் பார்பதில்லை இப்படிபட்ட பிள்ளைகள் எந்த நேரத்திலும் யாருக்கு வேண்டுமானாலும் பிறக்கலாம். இன்று ஓட்டிசம் பிள்ளைகளை வைத்திருக்கும் பெற்றோர் படும் வேதனை நாளை உங்களிற்கோ அல்லது எங்களிற்கோ வருவதற்கு வெகு தூரம் இல்லை ஏனனில் ஓட்டிசம் பிள்ளைகள் பிறப்பதற்குறிய சரியான காரணம் இதுவரைக்கும் யாருக்கும் தெரியாது ஆனால் இக்குழந்தைகளின் வீதாசாரம் வரவர கூடிக்கொண்டே செல்கிறது.

ஒசில்மோ ஆகிய நாங்கள் ஓட்டிசம் குழந்தைகளிற்கு நிழல் போல் விளங்குகிறோம். ஒசில்மோ யாதி, மதபேதம் பார்பதில்லை யார் வேண்டுமானாலும் ஒசில்மோவிடம் புகளிடம் பெறலாம். ஒசில்மோ, ஓட்டிசம் குழந்தைகளின் வாழ்விற்கு ஒளியுட்டுவதற்காக உறுவாக்கப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும். தற்பொலுது ஒசில்மோ மூலம் எத்தனையோ ஓட்டிசம் குழந்தைகள் குணமாக்கப்பட்டு சாதாரன பாடசாலைகளில் அவர்களது கல்வி நடவடிக்கைகளை மேற்கெள்கிறார்கள். இது எமக்கு கிடைத்த





பெரும் வெற்றி மட்டுமன்றி எமது பயனத்தை மென்மேலும் ஊக்கிவிப்பதற்கு ஒரு துாண்டுகோலாகும்.

அத்துடன் **"அமைதியாக தொண்டாற்றும் உத்தம மனிதர்"** என்ற தொனிப்பொருளில் ஐக்கியநாடுகள் சபையினால் UNITED NATION OF THE VOLUNTEER (UNV) தன்னார்வ தொண்டர்களை கொரவிக்கும் முகமாக வளங்கப்பட்ட உயரிய விருதாகிய **" வீ "** விருது முதன்முதலாக எமது ஒசில்மோ நிறுவனத்திற்கு 2011 ம் ஆண்டு கிடைத்தது. இது எமது சேவைக்கு மென்மேலும் வலு சேர்த்தது. இந்த விருது ஐக்கிய நாடுகள் சபையின் தன்னார்வ தொண்டர்கள் ஆரம்பிக்கப்பட்டு பத்தாம் ஆண்டு நிறைவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இந்த விருதானது ஒசில்மோவின் ஸ்தாபகர் டாக்ரர் சின்னையா தேவானந்தன் மற்றும் அவருடன் இனைந்து செயலாற்றும் குளுவினரின் முயற்ச்சிக்கு கிடைத்த வெற்றி மட்டுமன்றி ஓட்டிசம் குழந்தைகளிற்கு கிடைத்த ஒரு பெரும் வைற்றியுமாகும். இதன் மூலம் ஓட்டிசம் குழந்தைகள் பற்றிய விழிப்புனர்ச்சி மென்மேலும் உலகலாவிய ரீதியில் கொண்டு செல்லப்பட்டது.



ஒசில்மோ ஓட்டிசம் சென்டர் மூலமாக இலங்கையில் உள்ள ஓட்டிசம் குழந்தைகள் மட்டுமன்றி உலகலாவிய ரீதியில் உள்ள ஓட்டிசம் குழந்தைகளும் குணப்படுத்தப்பட்டு உள்ளனர். இவர்களில் சிலர் தமது சகோதரசகோதரிகளிலும் பார்க்க கெட்டித்தனமாக கல்வி

நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். இது மேலும் ஒசில்மோவிற்கு பெருமை சேர்க்கிறது. தற்போது இலங்கை மட்டுமன்றி ஆசிய, ஐரோபிய, கனடா போன்ற நாடுகளில் இருந்தும் ஓட்டிசம் குழந்தைகள் ஒசில்மோவின் உதவியை எதிர்பார்து வருகின்றனர். இவ்வாறு வருகின்ற எல்லா ஓட்டிசம் குழந்தைகளிற்கும் சரியான சேவையை வளங்குவதற்கு எமது இடவசதி மட்டுமன்றி முளுமையான வசதிவாய்ப்புக்கள் போதாது உள்ளது.

அதுமட்டுமன்றி எமது கடந்தகால வைத்திய சேவை மற்றும் ஆராச்சி மூலம் நாம் கண்ட உண்மை என்னவென்றால் எமது நிலயத்தில் தங்கவைத்து முழுநேர வைத்திய அல்லது பயிற்சி சூழளில் இருக்கும் ஓட்டிசம் பிள்ளைகளும் எம்முடன் ஒத்துலைத்து நாம் சொல்வனவற்றை பயிற்சி செய்யும் பெற்றோரின் பிள்ளைகளின் முன்னேற்றம் மிகவும் கூடுதலாக இருக்கிறது. எனவே தான் அதிகரித்து வரும் ஓட்டிசம் குழந்தைகளின் என்னிக்கைக்கு ஏற்ப மேலும் எத்தனையோ குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நாம் ஒசில்மோ ஓட்டிசம் கிராமம் ஒன்றை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

இன்றைய ஓட்டிசம் குழந்தைகள் நாளைய பெரியவர்களாகி வீட்டிற்கும் நாட்டிற்கும் உலகத்திற்கும் பாரமாக இல்லாது, அவர்களை நல்ல பிரயைகளாக்கும் புனிதமான நோக்கத்திற்காக இந்த ஒசில்மோ ஓட்டிசம் கிராமம் உருவாக்கப்பட உள்ளது.

இந்த ஒசில்மோ ஓட்டிசம் கிராமத்தில் ஓட்டிசம் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு தேவையான சகளவிதமான வசதிகளும்






உள்ளடக்கப்பட உள்ளது என்பதை மன மகிள்ச்சியுடன் கூறக்கொள்ள விரும்புகிறோம். இதற்குறிய முதற்கட்ட வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

ஆன்பான இரக்க உள்ளம் படைத்தவர்களே வடக்கு கிழக்கு மாவட்டங்கள் மட்டுமன்றி இலங்கை பூராகவும் ஏன் உலகலாவிய ரிதியிலும் உள்ள எத்தனையோ தமிழ் பேசும் உள்ளங்கள் எமது ஒசில்மோ மூலம் பயன் பெற்ற வண்ணம் உள்ளனர். ஆனால் எமது வசதி வாய்புக்களில் உள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு உங்கள் கரங்களை நாம் எதிர்பார்க்கிறோம். இந்த ஒசில்மோ ஓட்டிசம் கிராமம் என்பது நிச்சயமாக இலங்கை மட்டுமன்றி உலகலாவியரீதியில் உள்ள ஓட்டிசம் குழந்தைகளிற்கு ஒரு நிழலாக அமையும் என்பதில் மறு பேச்சிற்கு இடமில்லை.

ஆன்பான உள்ளங்களே உங்களாள் இயன்ற உதவியை நாங்கள் எதிர்பார்க்கிறோம். இந்த ஒசில்மோ ஓட்டிசம் கிராமம் சரியான முறையில் சென்றடைய உங்கள் உதவிகள் நிச்சயம் என்களுக்கு தேவை. இந்த ஒசில்மோ ஓட்டிசம் கிராமம் பற்றிய முழு விபரங்களையும் நீங்கள் எங்கள் இனைய தள முகவரி **www.osilmo.com** மூலம் பெற்றுகொள்ள முடியும். அதுமட்டுமன்றி நீங்கள் எமது தொலைபேசி, மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் வந்து மேலதிக விபரங்களைபெறுவது மட்டுமன்றி ஒசில்மோ ஆகிய நாம் யார்? என்ன செய்கிறோம்? எதற்காக ஒசில்மோவை ஆரம்பித்தோம்? நாம் உண்மையானவர்களா? என்பது பற்றிய முழு விபரங்களையும் தெரிந்து கொள்ளளாம்.





முழு விபரங்களிற்கு

விலாசம் : **OSILMO Special Education and Research Center for Autistic Children**
**NO. 182/5 , Kasbewa road,**
**Boralesgamuwa, Colombo, Sri Lanka.**

தொலைபேசி: **+94112545114, +94714307274, +94714204250**

மின்அன்சல் : **osilmo@osilmo.com , osilmo@outlook.com**
**osilmo@yahoo.com,**
**osilmoautism@gmail.com**

இனையத்தள முகவரி: **www.osilmo.com**



# The signs of Autism















YOU CAN DO WHAT I CAN'T DO, I can do what you can't do,
Together we can do something, Beautiful for Autistic world.

-Dr.Sinniah Thevananthan

# SPECIAL EDUCATION & RESEARCH CENTER FOR AUTISTIC CHILDREN

OSILMO is the Life, Guidance and the World of your child